ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

# நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர்- 321) Jun (2)/ 2020



நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

## உட்பொதிவு


1. லக்ஷ்மீ தந்த்ரம் ........................................................................3

2. ஸங்கல்ப ஸூர்யோதயம் ..............................................................5

3. தத்வ த்ரயம்.................................................................................7

4. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)................................................15

5. ஸ்தோத்ர ரத்னம் (பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)........................20

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

# லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 141)

55. ஸர்வாநுச்சாவசாஞ்சப்தாம்ஸ்தத்பாவேந விபாவயேத்
அக்நீஷோமவிபாகஜ்ஞ: க்ரியாபூதி விபாகாவித்
56. ஸ்தூல ஸூக்ஷ்ம பரத்வாநாம் வேதிதா ச யதார்த்தத:
அங்கோபாங்காதி தந்த்ரஜ்ஞோ முத்ராபேத விதாநவித்
57. அந்தர்யாக பஹிர்யாக ஜப ஹோம விசக்ஷண:
புரச்சரணபேதஜ்ஞ: ஸித்தி ஸாதந தத்தவித்
58. ஸம்ஜ்ஞாமூர்த்திர் விதாநஜ்ஞஸ் தத் ஸாதந விதாநவித்
சாரீர ஆதாரார தத்வஜ்ஞோ யோக தத்வ விசக்ஷண:
59. ஏவம் ப்ரகார: சாஸ்த்ரார்த்தா வேதீ தீரோ விசக்ஷண:
அஹிம்ஸ்நோ தமதாநஸ்தோ மாம் பஜேத ச்ரியம் நர:

**பொருள்** – அந்த உபாஸகன் அனைத்து மந்த்ர சப்தங்களும், என்னையே சப்தப்ரஹ்மமாகக் குறிப்பதாக அறியவேண்டும். யார் ஒருவன் அக்னி மற்றும் சோமன் ஆகியவற்றுக்கு இடையே உள்ள பேதங்களை அறிகிறானோ; யார் ஒருவன் க்ரியா மற்றும் பூதி ஆகிய இரண்டு சக்திகளுக்கும் இடையே உள்ள பேதங்களை அறிகிறானோ; ஸ்தூலம் மற்றும் ஸூக்ஷ்ம வடிவில் உள்ள உயர்ந்த சக்தியை யார் ஒருவன் உள்ளபடி அறிகிறானோ; யார் ஒருவன் தந்த்ரங்களை அதன் அங்கங்களுடன் அறிகிறானோ; யார் ஒருவன் அனைத்து முத்ரைகளையும் அறிகிறானோ; யார் ஒருவன் அந்தர்யாகம், பஹிர்யாகம், ஜபம், ஹோமம் ஆகியவற்றை அறிகிறானோ; யார் ஒருவன் அடையவேண்டிய இலக்கு மற்றும் அடைவதற்கான உபாயம் ஆகியவற்றை அறிகிறானோ; யார் ஒருவன், பெயர் மற்றும் உருவம் ஆகியவற்றைக் குறித்தும், அவை தொடர்பான ஸாதநங்களைக்

குறித்தும் அறிகிறானோ; யார் ஒருவன் ஆதார சக்ரம், யோக தத்வங்கள், சாஸ்த்ரங்கள் ஆகியவற்றை அறிகிறானோ; யார் ஒருவன் அஹிம்ஸை, அமைதி, கருணை ஆகியவற்றைக் கடைப்பிடிக்கிறானோ; அப்படிப்பட்டவனே ஸ்ரீயாகிய என்னை உண்மையாகவே விரும்பி வழிபடுகிறான்.

ஸ்ரீலக்ஷ்மீதந்த்ரம் இருபத்து எட்டாவது அத்யாயம் ஸம்பூர்ணம்

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

# ஸங்கல்ப ஸூர்யோதயம்

(பகுதி – 8)

[நடி ஸூத்ரதாரனிடம்] ஐயா! இந்த நாடகத்தை உருவாக்கிய கவியின் பெயர் என்ன? அவரிடம் உள்ள மரியாதை காரணமாக, இங்கு அமர்ந்துள்ளவர்கள் நம் மீது மிகுந்த அன்பு காண்பிக்கிறார்களே!

[ஸூத்ரதாரன் நடியிடம்] நீ கேள்விப்படவில்லையா? புண்டரீகாக்ஷர் என்னும் ஸோமயாஜியின் புத்திரரும், எண்ணற்ற உயர்ந்த குணங்களுக்கு இருப்பிடமும், விச்வாமித்ர கோத்ரத்திற்கு அணிகலனும், தாமரை போன்ற இதயத்தில் எப்போதும் உயர்ந்த விஷயங்களைக் கற்பதிலேயே ஆனந்தம் கொள்பவரும் ஆகிய அனந்தஸூரி என்பவருடைய புத்திரரான வேங்கடநாதர் என்பவரே இதனை இயற்றியவர் ஆவார். இவர் ஸ்ரீரங்கநாதனுடைய ஆணையால், “வேதாந்தாசார்யர்” என்னும் விருது பெற்றார்; அனைவராலும் கொண்டாடப்படும் “கவிதார்க்கிக ஸிம்ஹம்” என்னும் பெயரும் பெற்றார்; தனது சிஷ்யர்களுடைய கோஷ்டியால் ஏற்றப்பட்ட வெற்றிக்கொடிகள் விளங்கும் பத்து திசையின் மாளிகைகளை அலங்கரிப்பவர் ஆவார்; அனைத்து சாஸ்த்ரங்களிலும் உண்டாகின்ற சந்தேகங்களையும் நீக்கும் திறன் கொண்டவர் ஆவார்.

12. கௌட வைதர்ப பாஞ்சாலமாலாகாராம் ஸரஸ்வதீம்
யஸ்ய நித்யம் ப்ரசம்ஸந்தி ஸந்த: ஸௌரபவேதிந:

**பொருள்** – (ஸூத்ரதாரன் கூறுவது) அவருடைய அனைத்து கவிகளிலும் கௌடம், வைதர்பம், பாஞ்சாலம் என்பதான சொல் அமைப்புக்களுடன் கூடிய

சொற்றொடர்கள், அந்தந்த ரஸங்களுடன் காணப்படுவதாக, சொற்களுடைய சுவை அறிந்தவர்கள் இவருடைய கவிகளைக் கொண்டாடுகிறார்கள்.

13. அந்யேந்த்ரகம் புவநமந்யதநிந்த்ரகம் வா கர்தும் க்ஷமே கவிரபூதயமந்வவாயே
ஜந்ம த்விதீயம்ருஷிபி: கதிதம் யத: ஸா தேவீ ச விச்வஜநநீ யதநந்யகோத்ரா

**பொருள்** – (ஸூத்ரதாரன் கூறுவது) இந்த லோகத்திற்கு வேறு ஒரு இந்த்ரனையோ அல்லது இந்த்ரன் இல்லாத வேறு ஒரு உலகத்தையோ படைக்கவல்ல ஒரு வம்சத்தில் இந்தக் கவியானவர் அவதரித்துள்ளார். அனைத்து லோகங்களுக்கும் தாயாக உள்ள எந்த ஒரு காயத்ரியிடமிருந்து இரண்டாவது பிறப்பு உண்டாகிறதோ (அதாவது காயத்ரி உபதேசம் பெறுதல் என்பது இரண்டாவது பிறப்பு என்று கருத்து), அத்தகைய மந்த்ரமும் இவருடைய கோத்ரமே ஆகும்.

தூப்புல்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாச்சியார் ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச் செய்த

# தத்வ த்ரயம்

இதற்கு ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்
(பகுதி – 17)

37. ஜ்ஞாநத்தையொழியவும் தன்னையறிகையாலும், ஜ்ஞாநம் ஸாரபூதகுணமாய் நிரூபக தர்மமாயிருக்கையாலும் சொல்லிற்று.

**அவதாரிகை -** இப்படி சாஸ்த்ரங்கள் சொல்லுகைக்கு மூலம் இன்னதென்கிறார்.

**விளக்கம் –** இவ்விதம் சாஸ்த்ரங்கள் கூறுவதற்கான அடிப்படை இன்னது என்று அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (ஜ்ஞாநத்தையொழியவும் தன்னையறிகையாலும்) என்று தொடங்கி, அதாவது ஜ்ஞாநம் ஸ்வாச்ரயத்துக்கு ஸ்வயம்ப்ரகாசகமாயிருக்குமோபாதி ஜ்ஞாந நிரபேக்ஷமாகத் தனக்குத்தானே ப்ரகாசிக்கையாலும் ஜ்ஞாநம் இவனுக்கு ஸாரபூத குணமாகையாலே ஸ்வரூபாநுபந்தித்வேந ஸ்வரூப நிரூபக தர்மமாகையாலும் சொல்லிற்றென்கை.

**விளக்கம் –** ஞானமானது தனது இருப்பிடமாக உள்ள ஆத்மாவிற்குத் தானே தன்னை வெளிப்படுத்துகிறது; அதே போன்று, ஞானத்தை எதிர்பார்க்காமல் ஆத்மாவானது தனக்குத் தானே தன்னை வெளிப்படுத்துகிறது. ஆகவே ஞானமானது ஆத்மாவிற்கு ஸாரமான ஒரு உள்ளது என்றாகிறது. இதன் விளைவாக ஆத்மாவுடன் சேர்ந்து நின்று ஸ்வரூபத்தை நிரூபித்துக் காண்பிக்கும் தர்மமாக உள்ளதால், கடந்த சூர்ணையில் கூறப்பட்டது போன்று உரைக்கப்பட்டது.

**வ்யாக்யானம்** – இதுதான், "தத் குண ஸாரத்வாத் து தத் வ்யபதேச: ப்ராஜ்ஞவத்", "யாவதாத்ம பாவிதவாச்ச ந தோஷஸ் தத் தர்சநாத்" என்கிற ஸூத்ர த்வயத்தாலும் சொல்லப்பட்டது. "ஜ்ஞாந மாத்ர வ்யபதேசஸ்து ஜ்ஞாநஸ்ய ப்ரதாந குணத்வாத், ஸ்வரூபாநுபந்தித்வேந ஸ்வரூப நிரூபக குணத்வாத் ஆத்ம ஸ்வரூபஸ்ய ஜ்ஞாநவத் ஸ்வப்ரகாசத்வாத்வோபபத்யதே" என்றிறே தீபத்திலே பாஷ்யகாரரும் அருளிச்செய்தது.

**விளக்கம்** – இந்தக் கருத்தானது, ப்ர. ஸூ. (2-3-29) - தத் குண ஸாரத்வாத் து தத் வ்யபதேச: ப்ராஜ்ஞவத் - ஞானம் என்ற குணத்தைச் சாரமாகக் கொண்டுள்ளதால் (சாரம் என்றால் "இன்றியமையாத" என்று பொருள்), ஆத்மாவானது ஞானம் என்று கூறப்படுகிறது. பரமாத்மா (ஆனந்தம் என்று) கூறப்படுவது போன்று – என்றும், ப்ர. ஸூ. (2-3-30) - யாவதாத்ம பாவித்வாத் ச ந தோஷ: தத் தர்சநாத் - ஆத்மா உள்ளவரை ஞானம் தொடர்வதாலும், ஆத்மாவை ஞானம் என்று கூறுவதில் தவறில்லை. இது போன்று கூறப்படுவதைக் காணலாம் – என்றும் உள்ள இரண்டும் ஸூத்ரங்களாலும் கூறப்பட்டது. இதனை பாஷ்யகாரரும் வேதாந்ததீபத்தில் - ஜ்ஞாந மாத்ர வ்யபதேசஸ்து ஜ்ஞாநஸ்ய ப்ரதாந குணத்வாத், ஸ்வரூபாநுபந்தித்வேந ஸ்வரூப நிரூபக குணத்வாத் ஆத்ம ஸ்வரூபஸ்ய ஜ்ஞாநவத் ஸ்வப்ரகாசத்வாத்வோபபத்யதே - ஆத்மாவானது ஞானமே ஆகும் என்று உரைக்கும் கருத்தானது, ஞானம் முதன்மையான குணமாக உள்ளதாலும், ஆத்மாவை நிரூபிக்கின்ற குணமாக உள்ளதாலும், ஆத்மஸ்வரூபம் போன்று தானே ப்ரகாசிப்பதாலும் ஆகும் - என்று அருளிச்செய்தார் அல்லவோ?

38. நியாம்யமாகையாவது ஈச்வர புத்த்யதீநமாக எல்லா வ்யாபாரங்களும் உண்டாம்படியிருக்கை.

**வ்யாக்யானம்** – அதாவது, "ஆத்மநி திஷ்ட்டந்நாத்மநோந்தரோயமாத்மா நவேத யஸ்யாத்மா சரீரம்ய ஆத்மாநமந்தரோ யமயதி ஸத ஆத்மாந்தர்யாம்யம்ருத" என்று இத்யாதிகளில் சொல்லுகிறபடியே, அந்தராத்மதயா நின்று நியமிக்கை ஈச்வரனுக்கு ஸார்வகாலீநமாகையாலே, இவ்வாத்ம வஸ்து அவனுக்கு நியாம்யமாகையாவது

சரீரத்தினுடைய ஸகலப்ரவருத்திகளும் சரீரியினுடைய புத்த்யதீநமாக உண்டாமாப் போலே சரீரபூதமான இவ்வாத்ம வஸ்துவினுடைய ஸகல வ்யாபாரங்களும் சரீரியான பரமாத்மாவினுடைய புத்த்யதீநமாகவே உண்டாம்படி இருக்கையென்றபடி. இப்படி தச்சரீரதயா தததீந ஸகலப்ரவருத்திகனானாலும், அசேதநமான சரீரம்போலே தானாக ஒரு ப்ரவருத்தி பண்ணமாட்டாதபடி இருக்கையன்றிக்கே, ஜ்ஞாத்ருத்வ கர்த்ருத்வ போக்த்ருத்வங்களை ஸ்வாபாவிக தர்மங்களாக உடையனாகையாலே, ஜ்ஞாந சிகீர்ஷா ப்ரயத்ந பூர்வக ப்ரவருத்தி க்ஷமனாயிருக்கையாலும், ஸகல ப்ரவருத்திகளும் இவனுடைய ப்ரதம ப்ரயத்நத்தை அபேக்ஷிததுக் கொணடு ஈச்வரன் அநுமதி தாநம் பண்ணுகையாலும், விதி நிஷேத சாஸ்த்ர வையர்த்தயமுமில்லை. இவனுடைய ப்ரவ்ருத்தி மூலமாக ஈச்வரன் பண்ணும் நிக்ரஹாநுக்ரஹங்களுக்கும் தததநுகுணமான பல ப்ரதாநத்துக்கும் விரோதமில்லை என்னுமிடம் கீழே சொல்லப்பட்டது.

**விளக்கம்** - நியாம்யம் என்று ஏன் கூறப்பட்டது என்றால், ஈச்வரனுடைய ஸங்கல்பத்தின்படியே ஆத்மா அனைத்து செயல்களையும் செய்வதால் ஆகும். அதாவது, ப்ரு. (3-7-22) - ய ஆத்மநி திஷ்டந் ஆத்மநோ அந்தர: | யம் ஆத்மா ந வேத | யஸ்ய ஆத்மா சரீரம் | ய ஆத்மாநம் அந்தர: ய ஆத்மாநம் அந்தரோ யமயதி | ஸ தே ஆத்மா அந்தர்யாமி அம்ருத: - யார் ஆத்மாவில் உள்ளானோ, யார் ஆத்மாவில் புகுந்துள்ளானோ, யார் இவ்விதம் உள்ளதை ஆத்மா அறியாதோ, யாருக்கு ஆத்மா சரீரமோ, யார் ஆத்மாவினுள் புகுந்து நியமிக்கிறானோ அவனே உன் ஆத்மா, உனக்கு அந்தர்யாமியாக உள்ள அவன் அழிவற்றவன் - என்பது போன்று வாக்கியங்களில் கூறுவது போன்று, ஆத்மாவின் அந்தராத்மாவாக நின்று நியமத்தல். ஈச்வரன் அனைத்து காலங்களிலும் உள்ளவன் என்பதால், ஆத்மாவானது அவனால் ஏவப்படுவதாக உள்ளது என்பது, “சரீரத்தின் அனைத்து செய்கைகளும் அந்தச் சரீரத்தில் உள்ள புத்தியின் அடிப்படையின் அமைவது போன்று, சரீரத்தின் உள்ளே இருக்கின்ற ஆத்மாவின் அனைத்து செயல்களும் அந்த ஆத்மாவைச் சரீரமாகக் கொண்டுள்ள பரமாத்மாவின் ஸங்கல்பத்திற்கு ஏற்றபடியே உள்ளது”, என்பதாகும். இவ்விதம் ஆத்மாவானது பரமாத்மாவின் சரீரமாக உள்ளதால், பரமாத்மாவின் கட்டுப்பாட்டிற்கு ஏற்பவே தனது செயல்களைச் செய்கிறது; ஆனால் அசேதநமான சரீரம் போன்று தானாகவே எந்த

ஒரு செயலையும் செய்ய இயலாமல் இருப்பதில்லை; அறிபவனாக இருத்தல், செயல் புரிபவனாக இருத்தல் மற்றும் அனுபவிப்பவனாக இருத்தல் ஆகிய தன்மைகளை இயல்பாகவே கொண்டதாக ஆத்மா உள்ளதால், "அறிவு, ஆசை, முயற்சி" ஆகியவற்றை முன்னிட்டுக் கொண்டு, செயல் புரிவதில் தகுதி கொண்டவனாகவே ஆத்மா உள்ளான்; மேலும் இவனுடைய முதல் முயற்சியை மட்டுமே எதிர்ப்பார்த்தபடி, ஈச்வரன், இந்த ஆத்மா செயலாற்ற அனுமதி அளிக்கிறான்; இந்தக் காரணங்களால், விதித்தல் மற்றும் தள்ளுதல் ஆகியவற்றைக் கூறும் சாஸ்த்ரங்கள் வீணாகப் போவதில்லை. ஆத்மாவின் செயல்கள் காரணமாக ஈச்வரன் செய்யும் அனுக்ரஹம் மற்றும் அளிக்கும் தண்டனை ஆகியவற்றுக்கும், இவற்றின் மூலம் விளையும் பயன்களுக்கும் விரோதம் இல்லை என்று முன்பே கூறப்பட்டது.

39. தார்யமாகையாவது அவனுடைய ஸ்வரூப ஸங்கல்பங்களை ஒழிந்தபோது தன் ஸத்தை இல்லையாம்படியிருக்கை.

**வ்யாக்யானம்** – அதாவது, "ஏஷ ஸேதுர் விதரண:", "ஏதத் ஸர்வம் ப்ரஜ்ஞாநே ப்ரதிஷ்ட்டிதம்", "ஏவமேவ சாஸ்மிந்நாத்மநி ஸர்வாணி பூதாநி ஸர்வ ஏவாத்மாநஸ் ஸமர்பிதா", "ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரசாஸநே கார்கி ஸூர்யா சந்த்ரமஸௌ வித்ருதௌதிஷ்டத:" என்று இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே, ஈச்வரன் ஸகல சேதநாசேதநங்களையும் பற்றி நியமேந தாரகனாகையாலே, இவ்வாத்ம வஸ்து தார்யமாகையாவது தனக்கு நியமேந தாரகமாய்க் கொண்டு தன் ஸத்தா ஹேதுவாயிருக்கிற அவனுடைய திவ்யாத்ம ஸ்வரூபத்தையும் இந்த ஸ்வரூபாச்ரிதத்வத்துக்கும் ஸத்தாநுவ்ருத்தி ரூபையான ஸ்திதிக்கும் ஹேதுவாயிருந்துள்ள அவனுடைய நித்யேச்சாகார்ய ஸங்கல்பத்தையும் ஒழிந்தபோது தன் ஸத்தாஹாநி பிறக்கும்படியிருக்கை என்றபடி.

**விளக்கம்** – தார்யம் ஆவது என்றால், ஈச்வரனுடைய ஸ்வரூபம் மற்றும் ஸங்கல்பம் ஆகியவற்றை விலக்கினால் ஆத்மாவின் இருப்பு என்பது இல்லை என்பதாகும். அதாவது ப்ரு. (4-4-22) - ஏஷ ஸேது: விதரண: - ஸம்ஸாரத்தைக் கடக்க உதவும் பாலம் இவனே – என்றும், ஏதத் ஸர்வம் ப்ரஜ்ஞாநே ப்ரதிஷ்ட்டிதம் – இந்த

அனைத்தும் உயர்ந்த அந்த ஆத்மாவிடமே நிலைபெற்று நிற்கின்றன - என்றும், ஏவமேவ சாஸ்மிந்நாத்மநி ஸர்வாணி பூதாநி ஸர்வ ஏவாத்மாநஸ் ஸமர்பிதா – இந்த அனைத்தும் உயர்ந்த அந்த ஆத்மாவிடமே நன்கு காக்கப்பட்டு நிற்கின்றன - என்றும், ப்ரு. (3-8-9) - ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரசாஸநே கார்க்கி ஸூர்யா சந்த்ரமஸௌ வித்ருதௌ திஷ்டத: - கார்க்கி! இந்த அக்ஷரத்தின் கட்டளையால் சூரியனும் சந்த்ரனும் நிலைக்கிறார்கள் – என்றும் உள்ளது போன்ற வாக்கியங்களில் கூறப்பட்டபடி, ஈச்வரன் அனைத்து சேதந அசேதனங்களையும் தனது நியமனம் என்ற செயல் மூலம் தாங்குகிறான் என்றாகிறது; ஆகவே இந்த ஆத்மாவிற்குத் தார்யம் ஆவது என்பது: தன்னை நியமனம் செய்வது மூலம் தன்னைத் தாங்கியபடி உள்ளதன் விளைவாக தனது இருப்பு என்பதற்கு ஈச்வரனே காரணமாக உள்ள திவ்யாத்ம ஸ்வரூபத்தையும், அந்த ஸ்வரூபத்தைச் சார்ந்துள்ள தன்மையையும், தனது இருப்பு என்பது தொடர்ந்து நீடிப்பதற்குக் காரணமாக உள்ளதான "எப்போதும் ஆத்மாக்களைக் குறித்த விருப்பத்துடன் இருத்தல்" என்ற ஸங்கல்பத்தையும் நீக்கும்போது தனது இருப்பிற்குத் தாழ்வு ஏற்படுதல் என்பதாகும்.

**வ்யாக்யானம்** - இப்படி தார்ய வஸ்துக்களை ஸ்வரூப ஸங்கல்பங்களிரண்டாலும் தரிக்குமென்னுமிடம் அபியுக்தராலே விஸ்தரேண ப்ரதிபாதிக்கப்பட்டது. எங்ஙனே என்னில்; ஈச்வரன் தன் ஸ்வரூப நிரூபக தர்மங்களுக்கும் நிரூபிதஸ்வ ரூப விசேஷணங்களான குணங்களுக்கும் போலே ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்த த்ரவ்யங்களுக்கும் அவ்யவஹிதமாக ஸ்வரூபேண ஆதாரமாயிருக்கும் அவ்வோ த்ரவயங்களை ஆச்ரயித் திருக்கும் குணாதிகளுக்கு அவ்வோ த்ரவ்யத்வாரா ஆதாரமாயிருக்கும் ஜீவர்களாலே தரிக்கப்படுகிற சரீரங்களுக்கு ஜீவத்வாரா ஆதாரமாயிருக்குமென்று சிலர் சொல்லுவர்கள். ஜீவனை த்வாரமாகக் கொண்டு ஸ்வரூபத்தாலும் ஆதாரமாமென்று சில ஆசார்யர்கள் சொல்லுவர்கள். இப்படி ஸர்வமும் ஆச்ரயத்தைப் பற்ற அப்ருதக் ஸித்த விசேஷணமாகையாலே இவற்றின் ஸத்தாதிகள் ஆச்ரய ஸத்தாதீநங்கள். ஸர்வ வஸ்துக்களினுடையவும் ஸத்தை ஸங்கல்பாதீநையாகையாவது அநிதயங்கள் அநிதயேச்சையாலே உத்பந்நங்களாயும் நித்யங்கள் நித்யேச்சாஸித்தங்களாயுமிருக்கை. இவ்வர்த்தத்தை

"இச்சாத் ஏவ தவ விச்வபதார்த்த ஸத்தா" என்கிற ச்லோகத்தாலே அபியுகதர் விவேகித்தார்.

**விளக்கம்** - இவ்விதம் ஈச்வரன், தன்னால் தாங்கப்படும் அனைத்து வஸ்துக்களையும், தனது ஸ்வரூபம் மற்றும் ஸங்கல்பம் ஆகியவற்றால் தாக்குகிறான் என்பதைச் சான்றோர்கள் மிகவும் விரிவாக அருளிச்செய்தனர். எவ்விதம்? ஈச்வரன் தனது ஸ்வரூபத்தை மற்றவர்களுக்கு உணர்த்தவல்ல தர்மங்கள் மற்றும் அவற்றால் நிரூபிக்கபட்ட ஸ்வரூபத்துடன் கூடியுள்ள குணங்கள் ஆகியவற்றுக்குப் போன்றே, தன்னைத் தவிர்ந்துள்ள மற்ற அனைத்து வஸ்துக்களுக்கும் வேறு எதன் மூலமும் அல்லாமல் தனது ஸ்வரூபம் கொண்டே தாங்கும்படி செய்கிறான். அந்தந்த வஸ்துக்களைச் சார்ந்துள்ள குணங்கள் போன்றவற்றுக்கு, அந்தந்த வஸ்துக்களையே ஆதாரமாக்குகிறான். ஜீவாத்மாவால் தாங்கப்படும் சரீரங்களுக்கு ஜீவாத்மாக்களையே ஆதாரமாக்குகிறான். அல்லது ஜீவாத்மாக்கள் மூலமாக ஈச்வரன் தனது ஸ்வரூபம் கொண்டு தாங்குவதாகவும் சிலர் கூறுவர். இவ்விதம் அனைத்து வஸ்துக்களும் ஈச்வரனுடைய ஆதாரத்தைப் பெறுவதற்காக, அவனை விட்டுப் பிரியாதபடி ஒரு சேர்த்தி கொண்டவையாக உள்ளன; எனவே இவற்றின் இருப்பு போன்றவை, ஈச்வரனுடைய இருப்பிற்கு அடங்கியவையே ஆகும்; அனைத்து வஸ்துக்களுடைய இருப்பு என்பது ஈச்வரனுடைய ஸங்கல்பத்திற்கு வசப்பட்டே உள்ளது; இது என்றபடி என்றால், "நிலை மாறியபடி உள்ள வஸ்துக்கள் அனைத்தும், மாறியபடி உள்ள இச்சை காரணமாக உண்டாகின்றன" என்பதாலும், "நித்யமான வஸ்துக்கள் அனைத்தும் நித்யமான இச்சையால் ஏற்படுகின்றன" என்பதாலும் ஆகும். இந்தக் கருத்தானது ஸ்ரீவைகுண்ட ஸ்தவத்தில் – இச்சாத் ஏவ தவ விச்வபதார்த்த ஸத்தா - உலகில் உள்ள அனைத்து வஸ்துக்களும் அவனுடைய இச்சையால் ஏற்பட்டன – என்று கூறப்பட்டது.

**வ்யாக்யானம்** - இத்தாலே ஸர்வத்தினுடையவும் ஸத்தாநுவ்ருத்தி ரூபையான ஸ்திதியும் ஈச்வரேச்சாதீநையானபடியாலே ஸர்வமும் ஈச்வர ஸங்கல்பாச்ரிதமென்று சொல்லுகிறது. குரு த்ரவ்யங்கள் ஸங்கல்பத்தாலே த்ருதங்களென்று சாஸ்த்ரங்கள் சொல்லுமது "த்யௌஸ்ஸசந்தரார்க்க நக்ஷத்ராகம் திசோபூர்

மஹோததி: வாஸுதேவஸ்ய வீர்யேண வித்ருதாநி மஹாத்மந:” என்கிறபடியே ஓரோ தேச விசேஷங்களிலே விழாதபடி நிறுத்துகையைப் பற்ற இப்படி இச்சாதீந ஸத்தாஸ்திதி ப்ரவ்ருத்திகளான வஸ்துக்களுக்கு பரமாத்ம ஸ்வரூபமென் செய்கிறது? என்னில்; பரமாத்மாவினுடைய இச்சை இவ்வஸ்துக்களை பரமாத்மாவின் ஸ்வருபாச்ரிதங்களாக வகுத்து வைக்கும். இப்படி, ஸர்வ வஸ்துவும் ஈச்வர ஸ்வரூபாதீநமுமாய் ஈச்வரேச்சாதீநமுமாயிருக்கும். லோகத்திலும் சரீரம் சரீரியினுடைய ஸ்வரூபாச்ரயமுமாய் ஸங்கல்பாச்ரயமுமாயிருக்கக் காணா நின்றோம்; இவனிருந்தகாலமிருந்து, இவன் விட்டபோதொழிகையாலே ஸ்வரூபாச்ரிதம், இவ்வாத்ம ஸங்கல்பமில்லாத ஸுஷுப்த்யாத்யவஸ்தைகளிலே தெளிவது. ஜாக்ராதி தசைகளில் ஸங்கல்பத்தாலே விழாதபடி தாங்கும்போது ஸங்கல்பாச்ரிதம் என்னக் கடவது என்று இப்படி ரஹஸ்யத்ரயஸாரத்திலே ப்ரதிபாதிக்கையாலே.

**விளக்கம்** - இதன் மூலம் அனைத்து வஸ்துக்களுடைய இருப்பின் தொடர்ச்சி வடிவத்தில் உள்ளதான நிலைபெறுதல் என்பதும் ஈச்வரனுடைய இச்சைக்கு வசப்பட்டே உள்ளதால், அனைத்தும் ஈச்வரனுடைய ஸங்கல்பத்திற்கு அடங்கியே உள்ளன என்று கூறப்பட்டது. மிகவும் வலுவான வஸ்துக்கள் அனைத்தும் ஈச்வரனுடைய ஸங்கல்பத்தால் தாங்கப்படுகின்றன என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன; ஏனென்றால், த்யௌஸ்ஸ சந்த்ரார்க்க நக்ஷத்ராகம் திசோபூர் மஹோததி: வாஸுதேவஸ்ய வீர்யேண வித்ருதாநி மஹாத்மந: - சந்த்ரன், சூரியன், நக்ஷத்ரங்கள் ஆகியவற்றுடன் கூடிய ஆகாயம்; திசைகள், பூமி, ஸமுத்ரங்கள் போன்ற பலவும் வாஸுதேவனுடைய வீர்யத்தால் நிலையாக உள்ளன என்று மஹாத்மாக்கள் கூறுகிறார்கள் – என்பதற்கு ஏற்ப, அவற்றை அந்தந்த குறிப்பிட்ட இடங்களில் விழாமல் நிறுத்துவதால் ஆகும். இவ்விதமாக ஈச்வரனுடைய விருப்பத்திற்கு ஏற்ப தங்களுடைய இருப்பு மற்றும் செயல்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ள வஸ்துக்களுக்குப் பரமாத்மாவின் ஸ்வரூபம் என்ன செய்கிறது? விடை அளிப்போம். பரமாத்மாவின் இச்சையானது அந்த வஸ்துக்களை பரமாத்மாவின் ஸ்வரூபத்தை அண்டி நிற்பதற்கு வழி செய்கிறது. இப்படியாக அனைத்து வஸ்துக்களும் ஈச்வரனுடைய ஸ்வரூபத்திற்கு அடங்கியும், ஈச்வரனுடைய இச்சைக்கு அடங்கியும் உள்ளன. இந்த லோகத்தில் கூட

சரீரமானது ஆத்மாவின் ஸ்வரூபம் மற்றும் விருப்பத்திற்கு அடங்கி நிற்பதை நாம் காண்கிறோம்; ஒருவன் இந்த உலகில் வாழும் காலம் முடிய இருந்து, உயிரை விடும்போது ஒழிவதால் ஆத்மஸ்வருபத்திற்கு அடக்கமே ஆகிறான். இந்தக் கருத்தானது ஆத்மாவிற்கு சுயநினைவு இல்லாத உறக்கம் போன்ற நிலைகளில் உள்ளதைக் காணலாம். விழிப்பு போன்ற நிலைகளில், ஸங்கல்பத்தால் விழாதபடி தாங்கும்போது, ஸங்கல்பத்திற்கு அடங்கியவன் என்று கூறலாம். இப்படியாகவே ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் கூறப்பட்டது.

ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

# திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 286)

**வ்யாக்யானம்** - (தேறினோம்) இவர்கள் கோஷ்டியில் தெளிவு அரிதாயாயிற்று இருப்பது, ருஷிகள் கோஷ்டியில் கலக்கம் அரிதாயிருக்குமாபோலே. “இதர விஷய ப்ராவண்யம் ஆகாது” என்கிற தெளிவிறே ருஷிகளுக்கு உள்ளது; பகவத் ப்ராவண்யமடியாக வந்த கலக்கமிறே இது. “ஆகில், அது சொல்லிக் காணாய்” என்ன, (போர்ப்பாகு இத்யாதி) இரண்டு தலைக்கும் உறவாய்ப் பொருந்தவிடச் சென்று, வினைத்தலையிலே வந்தவாறே, “யஸ்ய மந்த்ரீச கோப்தாச” என்கிறபடியே அவர்கள் பறித்துக் கொண்ட பரிகரமெல்லாம் தானேயாய் நின்றானாயிற்று. போர்க்கு வேண்டும் நிர்வாஹமெல்லாம் தானே செய்து. பாகு என்று நிர்வாஹகர் செய்யும் தொழில். (தான் செய்து) ஏழுலகும் தனிக்கோல் செல்ல வீற்றிருந்த தான் செய்து. தன் ஆஸந பலத்தாலே ஸர்வத்தையும் நடத்தக் கடவ தான் செய்து கைதொடனாய். தானென்று மேன்மை சொல்லிற்று. இவள் மோஹிக்கிறது அவனுடைய ஸௌலப்யத்துக்கிறே. எளியவனெளிமைக்கும் அகப்படுமளவன்றே இவள், அம்மேன்மையுடையவன் தாழ நின்றதிலே அகப்படுமவளிறே இவள்.

**விளக்கம்** - ஆழ்வார்கள் கோஷ்டியில், பகவத் விஷயம் குறித்து எவ்விதம் எந்தவிதமான கலக்கமும் ஐயமும் இல்லாமல் உள்ளதோ, அதே போன்று இவர்கள் விஷயத்தில் தெளிவு என்பது இல்லாமல் உள்ளது. மற்ற விஷயங்களில் ஈடுபாடு இருத்தல்கூடாது என்னும் முடிவு ஆழ்வார்களிடம் தெளிவாக உள்ளது; ஆனால் இவர்கள் விஷயத்தில் பகவத் விஷயம் குறித்த ஈடுபாட்டில் தெளிவின்மையால்

ஏற்பட்ட கலக்கமே அதிகமாக உள்ளது. சரி, அதனை இந்தப் பெண்ணுடைய உறவினர்களிடம் தோழி உரைக்கலாம் அல்லவோ என்பதற்கு விடை அளிக்கிறார். (போர்ப்பாகு இத்யாதி) - பாரதப் போருக்கு வேண்டிய அனைத்தையும், இரண்டு தரப்பினருக்கும் உறவினன் என்ற விதத்தில், சமாதானம் ஏற்படும்விதமாகத் தானே தூதாகச் சென்றான்; ஆனால் போர் என வந்தவுடன், மஹாபாரதம் – யஸ்ய மந்த்ரீச கோப்தாச – மந்த்ரியாகவும் காப்பவனாகவும் உள்ளவன் யாரோ - என்பதற்கு ஏற்ப, துரியோதனன் பறித்துக் கொண்ட யாதவ சேனைகள் அனைத்தும் தான் ஒருவனே என்னும்படியாக, பாண்டவர் பக்கம் நின்றான். அதாவது போருக்குத் தேவையான அனைத்தையும் தானே செய்து. (தான் செய்து) - இதனை யார் மூலமாகச் செய்திருக்கிலாமே, அவ்விதம் செய்யாமல், தானே செய்தான் என்பதைக் கூறிகிறார்; திருவாய்மொழி (4-5-1) – ஏழுலகும் தனிக்கோல் செல்ல – என்பதற்கு ஏற்ப வீற்றிருந்து தானே செய்தான். தனது ஸிம்ஹாஸனத்தின் பலம் மூலமாக அனைத்தையும் செய்யலாம் என்றுள்ளபோதிலும், தனது கைப்படத் தானே செய்தான். “தான்” என்பதன் மூலம் இவனுடைய மேன்மை கூறப்பட்டது. ஆனால், இவள் மயக்கம் அடைந்தது என்பது, அவனுடைய எளிமைக்குணத்தை எண்ணியே ஆகும் என்றுள்ளபோது இங்கு மேன்மையைப் புகழ்வது எப்படிப் பொருந்தும் என்பதற்கு விடை அளிக்கிறார். எளியவனுடைய எளிமையான குணத்தை எண்ணி இவள் மயங்குவதில்லை; மேன்மை நிறைந்த ஒருவன் எளிமையான குணத்தை வெளிப்படுத்தி தாழ நிற்பதைக் கண்டு மயக்கம் கொள்பவள் ஆவாள் என்பதை உணர்த்துகிறார்.

**வ்யாக்யானம்** - (தான் செய்து அன்று ஐவரை வெல்வித்து) அவர்கள் நூற்றுவராய் துர்வர்க்கமடங்க அங்கே திரண்டு, இவர்கள் தாங்கள் ஐவராய் வெருவியராய் நின்ற அன்று; தான் கையும் அணியும் வகுத்து, படை பொருத்தி, ஸாரத்யம் பண்ணி, குதிரைகள் இளைத்தவிடத்திலே வாருணாஸ்த்ரங்கள் விடலாமிடங்கள் காட்டி விடுவித்து, அங்கே குதிரைகளை விட்டு நீருட்டிப் பூட்டி வென்றானென்னுமிடம். அர்ஜுநன் மேலேயாக வேண்டும் வ்யாபாரங்களையடையத் தானே செய்தானிறே. (ஐவரை வெல்வித்து) துர்யோதநாதிகளைத் தோற்பித்தவதிலும் அரிதுகாணும் பாண்டவர்களை வெல்வித்தது. அவர்களை துர்மாநத்தாலே தோற்பிக்கை அரிது;

இவளை ஸ்த்ரீத்வாபிமாநத்தாலே தோற்பிக்கை அரிது. அப்படியே "ந காங்க்ஷே விஜயம் க்ருஷ்ண" என்ற இவர்களை ஜயிப்பிக்கையும் அரிதிறே.

**விளக்கம் -** (தான் செய்து அன்று ஐவரை வெல்வித்து) - அவர்கள் நூறு பேர்களாக, அனைத்து தீயவர்களும் ஒரு சேரத்திரண்டு நின்றனர். இவர்கள் ஐந்து பேர்கள் மட்டுமாக நின்றனர். அந்த நாளில், தான் கையும் அணியுமாக நின்று படை பொருத்தி, தேர்ப்பாகனாகத் தேரை ஓட்டி, குதிரைகளை லாயத்தில் வருடியபடியே வாருண அஸ்த்ரங்களை இந்தந்த இடங்களில் தொடுக்கலாம் என்று காண்பித்துக் கொடுத்து, குதிரைகளுக்குத் தண்ணீர் அளித்தல் போன்றவற்றைச் செய்தவனாக நின்று, போரில் வென்றான். அர்ஜுனன் உயரவேண்டும் என்பதற்குத் தேவையான செயல்கள் அனைத்தையும் தானே செய்தான். (ஐவரை வெல்வித்த) – துரியோதனன் போன்றவர்களைத் தோற்கடிப்பதைக் காட்டிலும், பாண்டவர்களை வெல்லும்படிச் செய்வது மிகவும் கடினமான ஒன்றாகும். ஏன்? துரியோதனன் முதலானவர்கள் கர்வம் கொண்டவர்கள் என்பதால் தோற்கடிப்பது கடினமாகும்; அதனைப் போன்றே, இந்தப் பெண்ணானவள், பெண்களுக்கே உரிய நோயைக் கொண்டு நிற்பதால் இவளைத் தோற்கும்படிச் செய்வது மிகவும் கடினமாகும். இது போன்று கீதை (1-32) – ந காங்க்ஷே விஜயம் க்ருஷ்ண - க்ருஷ்ணா! எங்களுக்கு இந்த நாடு வேண்டாம் – என்று கூறுபவர்களை வெல்லும்படிச் செய்தல் கடினமே ஆகும்.

**வ்யாக்யானம் -** (மாயப்போர்) ஆச்சர்யமான யுத்தமென்னுதல், க்ருத்ரிம யுத்தமென்னுதல். பகலை இரவாக்குவது, "ஆயுதமெடேன்" என்று ஆயுதமெடுப்பது ஆனவை இத்தலையிலும் உண்டு; மஹாரதர் அநேகர் கூடி அபிமந்யு ஒருவனை நிரஸித்தவை தொடக்கமானவை அத்தலையிலும் உண்டு; இவற்றைச் சொல்லிற்றாகவுமாம். (தேர்ப்பாகனார்க்கு) அர்ஜுநனை எதிரிகள் சீறினால் அழியச்செய்வது தன்னையாம்படி, உடம்புக்கீடிடாதே, வெறுங்கையோடே தேர்த்தட்டிலே முன்னை நின்று ஸாரத்யம் பண்ணினபடியைச் சொல்லுகிறது. "அயமஸ்மி" நான் உன் அடியானன்றோ? ஏவிக் கார்யங் கொள்ளலாகாதோ? என்னும்.

**விளக்கம்** - (மாயப்போர்) - வியக்கும்படியான யுத்தம், வஞ்சனையுடன் கூடிய யுத்தம். பகலை இரவாக மாற்றுதல், "ஆயுதம் எடுக்கமாட்டேன்" என்று உரைத்துவிட்டு ஆயுதம் எடுத்தல் போன்றவை பாண்டவர்கள் பக்கமும் உள்ளது. மஹாரதர்கள் பலரும் சேர்ந்து நின்று அபிமன்யு ஒருவனை அழித்தல் என்பது அவர்கள் பக்கமும் உள்ளது. இவற்றையே "மாயப்போர்" என்கிறார். (தேர்பாகனார்க்கு) - அர்ஜுனனை எதிர்த்து நின்று பகைவர்கள் தாக்கினால், அவர்கள் முதலில் அழிப்பது க்ருஷ்ணனாகிய தன்னையே என்னும்விதமாக, திருமேனியில் கவசம் ஏதும் இடாமல், வெறுங்கையுடன் தேர்த்தட்டின் முன்னே நின்று, தேர் ஓட்டியாக நிற்கும் நிலையைக் கூறுகிறார். மஹாபாரதம் – அயம் அஸ்மி – நான் உனக்கு அடிமையாக நிற்கிறேன் - என்று உரைத்து, "என்னை ஏவலாள் போன்று பயன்படுத்தி, என் மூலமாக உனது கார்யங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம் அல்லவோ?", என்றான்.

**வ்யாக்யானம்** - (இவள்) அப்பாகிலே பிடிபட்ட இவள். "நிர்க்குண: பரமாத்மா ஸௌதேஹந்தேவ்ய அபி திஷ்டதி" என்கிறபடியே, ஸாரத்ய வேஷம் இவள் வடிவிலே நிழலெழுந்து தோற்றுகிறதில்லையோ? இவள் நெஞ்சு கலங்கி மோஹிக்கிறது தேர்ப்பாகனார்க்கு; "கடல் கலங்கிற்று" என்றால், "மந்த்ரத்தாலே" என்று இருக்க வேண்டாவோ? ஸாரத்ய வ்ருத்தாந்தத்தையொழிய, பரமபதத்தில் முதன்மைக்கு மோஹிக்குமோ? "மயர்வற மதிநலமருளப் பெற்ற" இவள், "மயர்வற மதிநலமருளப்" பெற்றார் கலங்கும்போது, அவனுடைய ஆச்ரித பாரதந்த்ரியத்தாலே ஆகவேண்டாவோ? ஒருவனுக்கு சோக நிவர்த்தகனானவன் காணுங்கோள் இவளுக்கு சோகத்தை விளைத்தான். ஆணுக்கு சோகத்தைப் போக்கினான்; அபலைக்கு சோகத்தை விளைத்தான்.

**விளக்கம்** - (இவள்) - அப்படிப்பட்ட அவனுடைய இந்த எளிமையில் இவள் அகப்பட்டாள். மஹாபாரதம் - நிர்க்குண: பரமாத்மா ஸௌதேஹந்தேவ்ய அபி திஷ்டதி - அனுமனிடம் பீமன், "தாழ்ந்த குணங்கள் ஏதும் அற்ற பரமாத்மா, உனது திருமேனி முழுவதுமாக வ்யாபித்துள்ளான்" என்றான் - என்பது போன்று, தேர் ஓட்டியாக நின்று அவன் செய்த செயல்கள் அனைத்தும் இவளுடைய வடிவத்தில் வெளிப்பட்டது போன்று தோன்றுகிறது. அந்தத் தேர்ப்பாகனை எண்ணி

அல்லவோ இவள் உள்ளம் கலங்கி மயக்கம் அடைகிறாள்? “கடல் கலங்கியது” என்றால் “மந்தரத்தால்” என்று அல்லவோ ஆகும்? தேர் ஒட்டிய நிகழ்வு அல்லாமல், பரமபதத்தில் இவன் முதன்மையாக உள்ள நிலையை எண்ணி மயங்குவாளோ? “மயர்வற மதிநலம் அருளப் பெற்றவள்” இவள் ஆவாள். இப்படி உள்ளபோது, “மயர்வற மதிநலம் அருளிப் பெற்ற” ஆழ்வார்கள் அவனுடைய “அடியார்களுக்கு வசப்பட்ட நிலை” என்பதை எண்ணியே கலங்குவது போன்று இவளும் இருப்பாள் அல்லவோ? துன்பத்தை நீக்குபவன் அல்லவோ இவளுக்கு இத்துன்பத்தை ஏற்படுத்தி உள்ளான்? ஆண்களுக்குச் சோகத்தை நீக்கினான், இந்தப் பெண்ணிற்குச் சோகத்தை ஏற்படுத்தினான்.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி ஆளவந்தார் அருளிச் செய்த

# ஸ்தோத்ர ரத்னம்

## இதற்கு ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்த வ்யாக்யானம்

(பகுதி – 2)

**வ்யாக்யானம்** - பகவத் வ்யதிரிக்த விஷயங்களில் ஸ்தோத்ரமாவது, "ஸ்தோத்ரம் நாம கிமாமநந்தி", "அந்யத்ராதத்குணோக்தி:" என்று, இல்லாதவற்றை ஏறிட்டுச் சொல்லுதல், உள்ளத்தையடையச் சொல்லுதலாயிருக்க, "யதோ வாசோ நிவர்த்தந்தே", "அவிஜ்ஞாதம் விஜாநதாம்", "பூதார்த்தே கதமா ஸ்துதி:", "ந ஸமர்த்தராஸ்ஸுராஸ் ஸ்தோதும்" என்று பரிச்சேதித்துப் பேச நிலமல்லாத பகவத் விஷயம் ஸ்துதி விஷயமானபடி என்? என்னில்: அங்ஙனேயிருந்ததேயாகிலும், "ஸ்தவ்யஸ் ஸ்தவ ப்ரிய:" என்று ஸ்துதி ப்ரியனாகையாலும், "ஏத்த ஏழுகுலம் கொண்ட" என்றும், "ஏத்தவேத்த எங்கெய்தும்?" என்றும், ஸ்தோத்ர வ்யவஹாரம் உண்டாய்ப் போருகையாலும், இதொழிய வாசக சப்தம் இல்லாமையாலும், இவ்விஷயத்திலும் ஸ்தோத்ரமென்னலாம்.

**விளக்கம்** - பகவானை அல்லாமல் மற்ற விஷயங்களைக் குறித்து புகழ்தல் என்பது, ஸ்ரீஸ்தவம் (3) - ஸ்தோத்ரம் நாம கிமாமநந்தி – ஸ்தோத்ரம் என்று எது கூறப்படுகிறது – என்றும், ஸ்ரீரங்கராஜஸ்தவம் (1-19) - அந்யத்ராதத்குணோக்தி: இல்லாத விஷயத்தை உள்ளதாகக் கூறிதல் என்பது பகவானைத் தவிர உள்ள மற்ற விஷயங்களில் – என்றும் கூறுவதற்கு ஏற்ப, இல்லாதவற்றை அந்தந்த விஷயங்களின் மீது ஏறிட்டு உரைத்தல் என்று கூறுவதாக உள்ளது. இப்படி உள்ளபோது, தைத். (9-10) – யதோ வாசோ நிவர்தந்தே - வாக்கும் மனமும் திரும்பின - என்றும், கேந. (2-3) – அவிஜ்ஞாதம் விஜாநதாம் - அறியாதவர்களுக்கு அறிந்ததாக உள்ளது - என்றும், பூதார்த்தே கதமா ஸ்துதி: – உண்மையாக உள்ள

விஷயத்தில் ஸ்துதி எப்படி இருக்கும் - என்றும், ஸ்ரீவிபு. (5-7-49) – ந ஸமர்த்தராஸ்ஸுராஸ் ஸ்தோதும் – உன்னைப் புகழ தேவர்களும் சாமர்த்தியம் கொண்டவர்கள் அல்லர் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, அளவிட்டு உரைக்க இயலாதபடி உள்ள பகவத் விஷயமானது ஸ்துதிக்கு இலக்காக எப்படி இருக்கமுடியும் என்று கேட்கலாம். விடை அளிப்போம். இவ்விதம் உள்ளபோதிலும், ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம் - ஸ்தவ்யஸ் ஸ்தவ ப்ரிய: - ஸ்தோத்ரம் செய்யத்தக்கவன், ஸ்துதியை விரும்பியபடி உள்ளவன் - என்று கூறுவதற்கு ஏற்ப ஸ்துதியை விரும்புபவன் என்பதாலும், திருவாய்மொழி (2-2-11) - ஏத்த ஏழுகுலம் கொண்ட - என்றும், திருவாய்மொழி (4-3-10) - ஏத்தவேத்த எங்கெய்தும் - என்று ஸ்தோத்ரம் செய்வதற்கான செயல்பாடு பொருந்துவதாலும் ஆகும்.

**வ்யாக்யானம் -** அதவா, "தர்மார்த்த காம மோக்ஷாக்யா: புருஷார்த்தா உதாஹ்ருதா: | இதம் சதுஷ்டயம்" என்றும், "மன்னும் அறம் பொருளின்பம் வீடு" என்றும் சொல்லுகிறபடியே புருஷார்த்தம் நாலாய், அவற்றில் தர்மம், ஸாதனதயா புருஷார்த்தமானாலும் க்லேஸாத்யமாகையாலும், அர்த்தம் ஸ்வயம் புருஷார்த்த மானாலும், அஸ்திரமாய், க்லேஸாத்யமாகையாலும், புருஷார்த்தாந்தரங்களுக்கு ஸாதனமாகையாலும், காமம் ஸ்வயம் புருஷார்த்தமானாலும், அல்பாஸ்த்திரத்வா நர்த்தாவஹத்வ பீபத்ஸாத்யநந்த தோஷ துஷ்டமாகையாலும், மோக்ஷ சாஸ்த்ரத்திலே மோக்ஷ விரோதித்வேந நிந்திதமாயிருக்கையாலும், ஆளவந்தார் அவற்றை விட்டு, மோக்ஷத்திலும் ஆத்ம ப்ராப்தி துக்கேந சிரகால ஸாத்யமாகையாலும், பகவதனுபவத்தைப் பற்ற அல்பமாயிருக்கையாலும், அதையும் விட்டு,

**விளக்கம் -** அல்லது வேறுவிதமாகவும் கூறலாம். ஸ்ரீவிபு. (1-18-22) - தர்மார்த்த காம மோக்ஷாக்யா: புருஷார்த்தா உதாஹ்ருதா: | இதம் சதுஷ்டயம் - தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்று கூறப்படும் நான்கு புருஷார்த்தங்களும் யாரிடமிருந்து பெறப்படுகின்றனவோ – என்றும், பெரியதிருமடல் (11) - மன்னும் அறம் பொருளின்பம் வீடு - என்றும் கூறுவதற்கு ஏற்ப புருஷார்த்தங்கள் நான்கு உள்ளன; அவற்றில் தர்மம் என்பது தகுந்த ஸாதனங்கள் மூலம் கிட்டுவது

என்பதால் மிகுந்த சிரமத்துடன் அடையப்படுவதாகவே உள்ளது; அர்த்தம் என்பது தானாகவே சேருவது என்றுள்ளபோதிலும், நிலை அற்றதாகவும் சிரமத்துடன் அடையப்படுவதாகவும் உள்ளது; மற்ற புருஷார்த்தங்களை அடைவதற்கான ஸாதனமாகவும், தானாகவே அடையப்படுவதாகவும் காமம் என்ற புருஷார்த்தம் உள்ளபோதிலும், "அற்பமானது, நிலையற்றது, துன்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல், வெறுக்கத்தக்க வழியில் அடையப்படுவது, தோஷத்துடன் கூடியது" போன்ற பலவிதமான தோஷங்களை உள்ளடக்கியதாகவும், மோக்ஷ சாஸ்த்ரங்களில் மோக்ஷத்திற்கு விரோதியாக உள்ளதால் நிந்திக்கப்படுவதாகவும் உள்ளது. ஆகவே ஸ்வாமி ஆளவந்தார் இவை அனைத்தையும் தள்ளினார். மோக்ஷத்திலும் கூட ஆத்மாவை அடைதல் என்பதான கைவல்ய மோக்ஷமானது துக்கத்துடன் சில காலம் கழிந்து கைகூடுவதாக உள்ளது என்பதாலும், பகவத் அனுபத்துடன் ஒப்பிட்டு நோக்கும்போது அற்பமானதாகவே உள்ளதாலும், அதனையும் தள்ளினார்.

ஸ்வாமி ஆளவந்தார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்